2008 ஏப்ரல் 9]

3. கவன ஈர்ப்பு

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதி, பாலமலைக் கிராமத்திற்குச் சாலை வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணிக்கு பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு. (குறுக்கீடுகள்)

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், (குறுக்கீடுகள்) மேட்டூர் வட்டம், கொளத்தூர் பகுதியிலே நீண்டகாலமாக, 34 கிராம மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருவதால், பாலமலைக்கு (குறுக்கீடுகள்) . . .

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொன்றாக எடுக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நாளையிலிருந்து ஒவ்வொன்றாக எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) எல்லாம் ஒவ்வொன்றாக எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன், நாளையிலிருந்து ஒவ்வொன்றாக எடுக்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். ஒவ்வொன்றாக எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதி, பாலமலைக் கிராமத்திற்குச் சாலை வசதி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள பாலமலைக்குச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த

[திரு. அ. தமிழரசு] [2008 ஏப்ரல் 9

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பாலமலை என்ற கிராமத்திற்கு சாலை அமைக்க, சேலம் வனக் கோட்டம், மேட்டூர் வனச் சரகத்தில் அடிமலைக்காடு முதல் கெம்மம்பட்டி வரை புதியதாக சாலை அமைக்கப்பட வேண்டும். பாலமலை காப்புக் காட்டினுள், இயற்கையாக வளர்ந்த மரங்கள் உள்ள காட்டினுள்ளே, இந்தச் சாலை அமைக்கப்பட வேண்டும். இந்தச் சாலையின் மொத்த நீளம் 8 கி.மீ. ஆகும். அதில் 6.36 கி.மீ. காப்புக் காட்டினுள்ளும், 1.64 கி.மீ. காப்புக் காட்டிற்கு வெளியேயும் செல்கின்றது. இந்தச் சாலையினை அமைப்பதன்மூலம் மொத்தம் எட்டாயிரம் மக்கள் பயன்பெறுவர்.

2. இச்சாலை அமைக்க நெடுஞ்சாலைத் துறையின்ரால் 2006-2007 ஆம் ஆண்டில் நில அளவைகள் மற்றும் நேர்படுத்தும் alignment) பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சாலைப் பணிக்கான செலவு ரூ.1.19 கோடி என நெடுஞ்சாலைத் துறை மதிப்பீடு செய்துள்ளது. காப்புக் காட்டிற்குள் சாலை அமைக்கப்பட வேண்டுமானால் 7.2 ஹெக்டேர் வன நிலம் தேவைப்படுகிறது.

3. வன நிலத்தில் சாலை அமைக்க வேண்டுமெனில், கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றுவது அத்தியாவசியமானதாகும்:

1) மாற்றம் செய்யப்படும் வன நிலத்திற்கு இரு மடங்கு காடு வளர்ப்பதற்கான நிலமாக வனத் துறைக்குத் தர வேண்டும்.

2) வன நிலத்திற்குப் பதிலாக அளிக்கப்படும் வனமற்ற நிலத்தில் மரங்களை வளர்ப்பதற்கான செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 9] [திரு. என். செல்வராஜ்]

3) 2002 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி 1 ஹெக்டேருக்குக் குறைவான மாற்றம் செய்யப்படும் தற்போதைய வன நிலத்திற்கு அளிக்கப்படும் முழு மதிப்பீட்டிலிருந்து பள்ளிகள், மருத்துவமனை ஆகியவற்றுக்கு மட்டும் விலக்களிக்கப்படும். இதர இனங்களுக்கு விலக்களிக்கப்படமாட்டாது. இதர இனங்களுக்கு வன நிலத்தின் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

4) வன நிலத்தைத் தவிர, வேறு வனமற்ற நிலம் கிடைக்கப்பெறவில்லை என்பதற்கான மாவட்ட ஆட்சித் தலைவரின் சான்றிதழ்.

4. மேற்கூறிய விதிமுறைகளைப் பின்பற்றி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருடனும், நெடுஞ்சாலைத் துறையினருடனும் கலந்தாலோசித்து, இயற்கையாக வளர்ந்த மரங்கள் வெட்டப்பட வேண்டிய காரணத்தினால், உச்ச நீதிமன்றத்தின் அனுமதியினையும் மற்றும் மத்திய அரசின் அனுமதியினையும் பெற்று இந்தச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணிக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மேட்டூர் வட்டம், கொளத்தூர் பகுதியிலே பாலமலைக்கு நீண்டகாலமாக ரோடு வசதி இல்லாமல் இருந்து வருகிறது. அங்கே 34 கிராமங்கள் இருக்கின்றன. அங்கு முழுக்க முழுக்க மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினாலே, அங்கு மலைவாழ் மக்களுக்கு உடல்நலம் பாதிக்கும்போது, அவர்கள் தொட்டில் கட்டி தூக்கிக்கொண்டு கொளத்தூர் பகுதியிலுள்ள, மருத்துவமனைக்கு வரவேண்டிய நிலை இருக்கின்றது. போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தாலே, அவர்களுக்கு அடிப்படை வசதியான கல்வி, சுகாதாரம், மின்சாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத நிலை இருக்கின்றது. Bore Well போட வேண்டுமென்று சொன்னால் அங்கு வாகனம் செல்ல முடியாத ஒரு நிலை இருக்கிறது. இதுகுறித்து மேட்டூர் சட்டமன்ற உறுப்பினரும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவருமான அண்ணன் திரு. கோ.க. மணி அவர்கள் அதிகாரிகளிடத்திலே தொடர்பு கொண்டு பேசியபொழுது அங்கே

வனத் துறை பகுதி வருகிறது, எனவே, இந்தச் செட்டியூர் முதல் பாலமலை வரை பாதை அமைப்பதற்குச் சாத்தியமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசமாக 2 ஏக்கர் நிலம் வழங்குகின்ற ஒரு நல்ல நிகழ்வை இன்றைக்குத் தமிழக அளவிலே செய்து வந்திருக்கிறார்கள். எனவே, வனத் துறை 2 மடங்கு நிலம் வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக, 2 ஏக்கர் இலவச நிலத் திட்டத்தின்மூலம் அந்த வனப் பகுதிக்குப் பதிலாக அவர்களுக்கு நிலத்தை அரசே வழங்கலாம் என்றும், அதைப்போலவே, அளிக்கப்படும் நிலப்பகுதியில் மரங்கள் நட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே வேளாண்மைத் துறை வாயிலாக தோட்டக்கலை. . .

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிழரசு, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. அ. தமிழரசு: முடித்துவிடுகிறேன். இது மலைவாழ் மக்கள் பிரச்சினை. தோட்டக் கலைத் துறையின்மூலம் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம். வனப் பகுதியிலே எடுக்கின்ற நிலத்திற்குப் பதிலாக பணம் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திலே செலுத்தி, இந்தப் பகுதிக்குக் கட்டாயமாகப் பாதை அமைப்பதை வனத் துறையே செய்து தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் வனச் சரகத்திலுள்ள பாலமலை கிராமத்திற்குச் சாலை அமைக்க வேண்டுமானால் அடிமலைக் காட்டிலிருந்து கெம்பம்பட்டி வரையில் உள்ள 7.95 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலை அமைக்க வேண்டும். அதிலே 6.36 கிலோ மீட்டர் தூரம் பாலமலை காப்புக் காட்டுக்குள்ளும், 1.59 கிலோ மீட்டர் வெளியிலும் வருகிறது. சாலை அமைக்க வேண்டுமென்றால் 1980 இந்திய அரசினுடைய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நாம் சில வரைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நமக்கு அங்கே பாதை அமைப்பதற்குத் தேவைப்படுகின்ற நிலம் 7.2 ஹெக்டேர். எனவே, அதற்கு மாற்றாக வேறு பகுதியில் 14.4 ஹெக்டேர் நிலம் தரப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், அந்த 14.4 ஹெக்டேர் நிலத்திலே மரம் வளர்ப்பதற்குரிய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2008 ஏப்ரல் 9] [திரு. என். செல்வராஜ்]

தொகையைக் கட்ட வேண்டும். அதன் பின்னால் நாம் அதற்காக உள்ள அனுமதியைப் பெற்றாக வேண்டும். அந்தப் பகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த வனப் பகுதியைத் தவிர, வேறு இடமில்லை என்ற ஒரு சான்றிதழ் தரவேண்டும். மருத்துவமனை அல்லது பள்ளிக்கூடங்களுக்கு என்றால் ஒரு ஹெக்டேருக்குள் நிலம் இருக்குமேயானால் அதை இலவசமாகக் கொடுத்துவிடலாம். ஆனால், மற்ற எந்தப் பணிகளுக்கென்றாலும் அதற்குரிய தொகையையும் கட்டியாக வேண்டும். இதையெல்லாம் நாம் கடைப்பிடித்ததற்குப் பிறகு அங்கே இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்டுவதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெற்று அதன் பின்னாலேதான் நிறைவேற்ற முடியும்.

2006-2007-லே நெடுஞ்சாலைத் துறையின் சார்பாகக் கணக்கிட்டு அந்தச் சாலையை அமைக்க *1.9* கோடி ரூபாய் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நேற்றைய நிலவரப்படி அதற்கு *4* கோடி ரூபாய் தேவை என்று எங்கள் துறையின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்காக கருத்துரு அனுப்பினாரேயானால் வனத் துறை அதற்கான அனுமதியை வழங்கும்.

4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

(அ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008-2009* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *25* - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,